**கதிர்காமம் பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கதிர்காமம் பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 933,869 ஆக இருந்த போதிலும், அது ரூபா 753,205 ஆக ரூபா 180,664 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வட்டி வருமானம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்ட தவறை 2019 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பு மூலம் சரிசெய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட செலவினமான ரூபா 54,865 தொகையான சிவிலிம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்ட ரூபா 804,570 பெறுமதியான தளபாட உபகரணங்கள், இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி என்பன | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 இன் நிதிக்கூற்றுக்களில் சரியாக சீராக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | மீளாய்வாண்டிற்காக 2019 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 490,313 தொகையான செலவினத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கடன்கொடுத்தோருக்காக சீராக்கப்படாத தவறை சரிசெய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iv) | மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 217,783 தொகையான மூலதன செலவினம், வருமானச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | செலவின தலைப்பு மாறி சீராக்கப்பட்ட தவறை 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். |
| (v) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 321,444 தொகையான வருமானம் கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்படாத தவறு திருத்தப்படும். |
| (vi) | மீளாய்வாண்டிற்காக செலவிடப்பட்ட ரூபா 52,986 தொகையான கடமைகளை நிறைவேற்றுதல் படி மற்றும் மீளாய்வாண்டின் நவம்பர் மாதத்திற்குரிய ரூபா 510,000 தொகையான உறுப்பினர் படிக்காக மாகாண சபையிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய பணம் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்படாத தவறு திருத்தப்படும். |
| (vii) | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை நிறுவனத்தின் (JICA) செயற்திட்டம் மூலம் மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 47,586,343 ஆக இருந்த போதிலும் ரூபா 20,856,343 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக நிதிரீதியான பெறுமதி உரிய நிறுவனத்திலிருந்து பெற்று கணக்கீடு செய்யப்படும். |
| (viii | நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா | சரியான பெறுமதி கணக்கீடு | நிதிரீதியான பெறுமதி சரியாக இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| ) | 300,000 தொகையான 02 டெக்ரர் டேலர்களின் பெறுமதி ரூபா 480,000 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | செய்யப்பட வேண்டும். | கணக்கீடு செய்யப்படும். |
| (ix) | இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சியப் பொருள் இருப்பின் பெறுமதி ரூபா 697,716 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,167,061 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இருப்பு அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டமை 2019 இன் போது சரி செய்யப்படும். |
| (x) | மீளாய்வாண்டிற்குரியதாக பெறவேண்டிய ரூபா 290,494 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானமாக கணக்கீடு செய்யப்படாமல் நிலுவையான வியாபார நிலைய வாடகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்குகளில் பிழையாக பதியப்பட்ட தவறை 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (xi) | சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த தண்ணீர் பவுசர் மற்றும் கைடெக்டரின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நன்கொடைகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வாகனம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி கணக்கீடு செய்யப்படாத தவறு சரிசெய்யப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற வைப்புக்கள், நிர்மாண கடன்பட்டோர், ஊழியர் கடன் மற்றும் நிலுவை கேள்வி, ஆதன வருமானம் என்ற கணக்கு மீதிகளுக்கும், ஏடுகள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 14,270,144 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் நாளதுவரையாக்கப் பட்டு இணங்காமைகளுக் குரிய காரணங்களைக் கண்டறிந்து கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களுக்கும் பட்டோலைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்த்து வைக்கப்படும். |

(இ) **கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 7,259,127 தொகையான சொத்து விடயங்களுக்குரிய காலப்பகுப்பாய்வு அறிக்கையும், ரூபா 16,616,272 தொகையான செலுத்த வேண்டிய 04 வைப்பு விடயங்களுக்குரிய நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடு, பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாமை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காலப்பகுப்பாய்வு அறிக்கை மாதமொன்றிற்குள் தயாரிக்கப்படுவதுடன் பதிவேடுகளை சரிசெய்தல் மாதமொன்றிற்குள் மேற்கொள்ளப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) 24 ஆம் பிரிவு | பிரதேச சபைக்குரிய வீதிகள் மற்றும் சிறு வீதிகளுக்காக விதீப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | வீதிப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | வீதிப் பதிவேடொன்று தயாரிக்கப்படுகின்றது. |
| (ii) 139 ஆம் பிரிவு | ஆதனவரி விதித்தலின் கீழ் ஏதேனுமொரு வீடு, கட்டிடம், காணி அல்லது ஆதனமொன்றின் வருடாந்தப் பெறுமதி மதிப்பிடுவதற்கு இயலுமான வகையில் தவணை அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை | வருடாந்த பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு முடியுமான வகையில் தவணை அறிக்கை கோரப்படல் வேண்டும். | தவணை அறிக்கை கோருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) 158, 162 மற்றும் 163 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 7,259,127 நிலுவை ஆதனவரி அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற் கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை ஆதன வரியை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,946,000 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,841,630 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 8,119,400 | 8,274,133 | 4,851,519 | 3,422,614 | 9,518,000 | 8,007,937 | 4,983,082 | 3,024,855 |
| (ii) | வாடகை | 14,440,900 | 11,975,699 | 11,859,098 | 116,601 | 11,474,000 | 13,279,976 | 13,221,269 | 58,707 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 967,600 | 1,374,100 | 1,374,100 | - | 1,179,660 | 1,605,774 | 1,605,774 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 19,827,100 | 22,088,007 | 14,189,350 | 7,898,657 | 26,576,800 | 14,768,095 | 13,665,098 | 1,102,997 |
| | மொத்தம் | 43,355,000 | 43,711,939 | 32,274,067 | 11,437,872 | 48,748,460 | 37,661,782 | 33,475,223 | 4,186,559 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 43,711,939 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் | நிலுவை வருமானம் விரைவாக | விசேட நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தி விரைவாக நிலுவையை |

| | | |
|---|---|---|
| இறுதிவரையிலும், ரூபா 11,437,872 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 26 சதவீதம் ஆகும். | அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.3 வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) (i) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 6,198,636 தொகையான ஆதனவரி வருமானத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,422,615 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 55 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 5,103,741 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 3,836,511 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அறவிடப்படாத தொகை ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை ஆதன வரியில் 75 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கு வருமான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படுவதாகவும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சபைக்குரிய 12 ஆதனங்களில் இருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 5,458,237 வரித்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய வரித்தொகை அறவிடப்பட வேண்டும். | சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டத்தரணி அவர்களுக்கு கோவையை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 118 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 946,270 தொகையான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | கடை வாடகை விரைவாக அறவிடப்படும். |

### 2.2.5 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய கலிபவுசர் மற்றும் ஜே.சீ.பீ இயந்திரம் என்பவற்றை வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 92,880 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை இயந்திர வாடகை அறவிடப்பட வேண்டும். | மேலும் ரூபா 33,320 தொகை நிலுவையாக உள்ளது. அந்த நிலுவை விரைவாக அறவிடப்படும். |

### 2.2.6 நிலையான வியாபார விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 1,143,400 தொகையான நிலையான விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டண வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அறிவித்தல் பதாதைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிறுவனத்திற்கு அறிவித்து, ஆரம்ப மெய்மையாய்வு மேற்கொண்டு பணம் விரைவாக அறவிடப்படுவதுடன் அறிவித்தல் பதாதைகளை அகற்றி சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் | முன்னைய ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் |

| | | |
|---|---|---|
| நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,369,048 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 4,866,004 என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | என்பன அறவிடப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 07 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் ஆண்டில் அடைந்து கொள்வதற்கு தேவையான நோக்கங்கள் மற்றும் அமுல்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதனால் வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்யும் இயலுமை இழக்கப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படும். |

**(இ) நிறைவேற்றப்படாத இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் முற்றத்தை அபிவிருத்தி செய்வதற்காக நேர் ஊழிய அடிப்படையின் கீழ் உள்ளக இணைப்பு சிறு கொங்கிறீட் கற்கள் பதிப்பதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 60,000 செலவிடப்பட்டு சட்டகம் மற்றும் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்திருந்த போதிலும், உரிய செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். | சபை அதிகாரப் பிரதேசத்தில் இரண்டு இடங்களில் நடைபாதையை மீளமைப்பதற்காக உப தலைவரின் கட்டளையின் அடிப்படையில் கொங்கிறீட் சிறுகற்கள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிறுவனத்திற்குரிய இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெறவேண்டிய கணக்குகள்** | | |
| (i) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 1 வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,351,392 தொகையான நிலுவை வியாபார | வாடகை அறவிட வேண்டிய தரப்பினரை இனங்கண்டு நிலுவை | மேற்கூறப்பட்ட கடை வாடகையை பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலையை வாடகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்படாதிருந்ததுடன் அந்த வாடகை அறவிடப்பட வேண்டிய தரப்பினரும் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | வாடகை அறவிடப்பட வேண்டும். | |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 1,604,560 கூட்டுத்தொகையான நிலுவை பொதுச் சந்தை வாடகை மற்றும் நிலுவை கடை வாடகை என்பன மீளாய்வாண்டின் போதும் அறவிடப்படாதிருந்ததுடன், அது தொடர்பான காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்படவில்லை. | காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டியிருந்தது டன் நிலுவை வாடகையும் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்படும். |
| (ஆ) | 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி ரூபா 4,319,539 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் ஆலோசனையின் அடிப்படையில் விரைவாகத் தீர்க்கப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 11 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் காணப்பட்ட 25 ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | ஊழியர் வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு அறிவிக்கப்படும். |

### 3.4 வாகனப் பயன்பாடு

--------------------------------

#### 3.4.1 வாகனங்களின் உரித்து கையேற்கப்படாமை

--------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 20 வாகனங்களின் சட்டரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு | வாகனங்களின் உரித்து கையேற்கப்பட | வாகனங்களின் உரித்தைக் கையேற்பதற்கு |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சபைக்குச் சொந்தமான 08 வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த ஓட்டப் பொழிப்பு என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த ஓட்ட பொழிப்பு என்பவற்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். | ஓட்ட அட்டவணை விரைவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும். |

### 3.5 இழப்பு மற்றும் நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் வருமானப் பரிசோதக உத்தியோகத்தரால் அறவிடப்பட்ட ரூபா 403,331 தொகையான நானாவித வருமானம் சபை நிதியத்தில் செலவு வைக்கப்படவில்லை. | மொத்தத் தொகையும் சபை நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டும். | சபைக்குப் பணத்தைக் கையளிக்குமாறு எழுத்து மூலம் அறவிக்கப்பட்டிருந்தது டன் சட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபையின் இரண்டு ஊழியர்களுக்கு 02 உப பற்றுச்சீட்டுப் புத்தகங்களும் ஒரு ஊழியருக்கு பி.ச.1 பற்றுச்சீட்டுப் புத்தகம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் அல்லது அறவிடப்பட்ட பணம் எதுவும் சபைக்கு மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அறவிடப்பட்ட பணம் தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பற்றுச்சீட்டுப் புத்தகம் மற்றும் அறவிடப்பட்ட பணம் என்பவற்றை சபைக்கு மீள கையளிக்க வேண்டியிருந்தது டன் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சில பற்றுச் சீட்டுப் புத்தகங்களின் பணம் சபைக்கு கையளிக்கப்பட்டதுடன் மிகுதி பற்றுச் சீட்டுக்களுக்குரிய பணம் விரைவில் அறவிடப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் எசல விழா கால எல்லையின் போது 11 வியாபார நிறுவனங்களால் காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பதாதைகள் மற்றும் கொடிகளுக்கான விளம்பர அறிவித்தல் கட்டணம் ரூபா 904,000 தொகை மற்றும் 15 வியாபார நிறுவனங்களால் 08 இடங்களில் நடாத்திச்செல்லப்பட்ட 19 காட்சிக் கூடங்களுக்காக அறவிடவேண்டிய கட்டணம் ரூபா 1,360,000 தொகை என்பன அறவிடப்படாமையினால் சபை நிதியத்திற்கு கூட்டுமொத்தமாக ரூபா 2,264,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | மொத்தப் பணமும் சபை நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டும். | விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம் விடுவிக்கப் பட்டுள்ளதாக பெயரிடப்பட்டுள்ள நிறுவனங்களில் இருந்து பணம் அறவிடப்படவில்லை. |
| (ஈ) | சபையின் நிரந்தர ஊழியர்கள் இருவருக்கும், தரகு அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர் ஒருவருக்கும் விநியோகிக்கப்பட்ட ரூபா 108,000 தொகையான வாகன தரித்துவைத்தல் கட்டணம் அறவிடப்பட்ட 09 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் அல்லது பணம் எதுவும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு கையளிக்கப்படவில்லை. | 09 பற்றுச்சீட்டுப் புத்தகங்களும் பணமும் சபைக்கு பெறப்பட வேண்டும். | உரிய பற்றுச்சீட்டுப் புத்தகம் மற்றும் பணம் என்பவற்றை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6 பெறுகை**

--------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டிற்கு இணங்க பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்திற்காக பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும், செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும், செலவினத்துடனும் ஒப்பீடுசெய்த போது 07 வருமான விடயங்களில் 11 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையிலும், 02 செலவின விடயங்களில் 21 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையிலும் முரண்கள் காணப்பட்டன. | சரியாக பாதீடு தயாரிக்கப்பட்டு அதில் காண்பிக்கப் பட்டுள்ள இலக்குகள் அடையப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் பாதீட்டைத் தயாரிக்கும் போது முரண்களைக் குறைக்கும் வகையில் பாதீடு தயாரிக்கப்படும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. |